

18

# ஹதீஸ் துறை இமாம்கள்

## பகுதி – 1

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், அவர்களது குணநலன்கள், அங்கலட்சணங்கள் முதலானவை ஹதீஸ் என வழங்கப்படுகின்றன.

அல்குர்ஆன் அருளப்பட்ட சந்தர்ப்பத்தில் **குத்தாபுல் வஹீ** எனப்பட்டோர் அதன் வசனங்களைப் பதிவுசெய்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் இக்காலத்தில் ஹதீஸ்களைப் பதிவதற்கான உத்தியோகபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அல்குர்ஆனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை, ஹதீஸ்கள் அல்குர்ஆனோடு கலந்துவிடும் என்ற அச்சம், எழுத்தறிவுடையோர் குறைவாகக் காணப்பட்டமை போன்றன ஹதீஸ்கள் பதிந்து பாதுகாக்கப்படாமைக்கான முக்கிய காரணங்களாக உள்ளன.

இருப்பினும் ஹதீஸ்களை நபித்தோழர்கள் தமக்கிருந்த அபார மனன ஆற்றலைக் கொண்டும் அவற்றை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும், சக தோழர்களோடு தாம் அறிந்தவற்றைப் பரிமாறிக்கொள்வதன் மூலமும், தமது அடுத்த பரம்பரையான தாபிஈன்களுக்கு ஹதீஸ்களைப் போதித்ததன் மூலமும் பாதுகாத்தனர். இவற்றுடன் ஒருசில ஸஹாபாக்களால் உத்தியோகபூர்வமற்ற முறையில் ஹதீஸ்கள் எழுதப்பட்டமையும் அவதானிக்கத்தக்கதாகும்.

ஹதீஸ்களைப் பாதுகாக்கும் வகையில் அவற்றைப் பரவலாகத் தேடிப் பதியும் பணி, தாபிஈன்கள் காலத்தில் இடம்பெற்றது. கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி, தனது ஆட்சிக் காலத்தில் கவர்னர்களுக்கும் அறிஞர்களுக்கும் நிருபங்கள் எழுதி, ஹதீஸ்களைச் சேகரிக்கும் பணியை ஊக்குவித்தார். இதன் பயனாக ஹதீஸ் துறையில் பல்வேறு கிரந்தங்கள் தோற்றம் பெற்றன.


தொடர்ந்து வந்த தபஉத் தாபிஈன்கள் காலப் பிரிவிலேயே ஹதீஸ் துறை உச்ச வளர்ச்சியைக் கண்டது. தாபிஈன்களிடம் ஹதீஸ்களைப் பயின்ற ஹதீஸ்துறை அறிஞர்கள் இத்துறைக்கு மகத்தான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

இக்காலப்பிரிவில் முஸ்னத், முஸன்னப், ஜாமிஉ எனப் பல வகையான ஹதீஸ் கிரந்தங்கள் தோற்றம் பெற்றன.

இவற்றுள் ''ஸிஹாஹுஸ் ஸித்தா'' என வழங்கப்படும் ஆறு பெரும் ஹதீஸ் கிரந்தங்கள் பிரபலமானவையாகும். இவ்வகையில் இக்கிரந்தங்களைத் தொகுத்துத் தந்த இமாம்கள் பற்றி அறிந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

## இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 194 – 256)

ஹிஜ்ரி 194 இல் பிறந்த இவரது முழுப் பெயர் **அபூ அப்தில்லாஹ் முஹம்மத் இஸ்மாயீல் அல் புஹாரி** என்பதாகும். உஸ்பெகிஸ்தானின் புஹாராவில் பிறந்ததனால் புஹாரி என அழைக்கப்படுகிறார். இளம் வயதில் தந்தையை இழந்த இவர் சிறு பராயத்திலேயே அல்குர்ஆனையும் ஏராளமான ஹதீஸ்களையும் மனனமிட்டுக் கொண்டார். ஹதீஸ் துறையில் அதீத ஆர்வம் காட்டிய இமாமவர்கள் ஹதீஸ்களை மனனம் செய்ததோடு ஹதீஸ் அறிவிப்பாளர்களது வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து வைத்திருப்பதில் கவனம் செலுத்தினார். அறிவுத் திறனும் அபார மனன ஆற்றலும் பெற்றிருந்த இவர் ஹதீஸ்களைப் பதிவதில் மிகவும் பேணுதலோடு நடந்துகொண்டார்.




தனது பதினாறாவது வயதில் முதல் தடவையாக ஹஜ்ஜுக்குச் சென்ற இமாமவர்கள் மக்காவிலேயே தங்கி அங்குள்ள முஹத்திஸ்களிடம் ஹதீஸ்களைப் பயில ஆரம் பித்தார். மேலும் பல பிரதேசங்களுக்கும் பிரயாணம் செய்து ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டார்.

ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் கொண்ட நூலொன்றைத் தொகுக்க வேண்டுமென அவர் அவாக் கொண்டிருந்தார். இமாம் அவர்களின் ஆர்வத்தைக் கண்ட இவரது ஆசிரியர் இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்களும் அதற்கு ஆர்வமூட்டினார்கள். இதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே ஸஹீஹுல் புஹாரி ஆகும். இதனைத் தொகுப்பதற்கு இமாமவர்கள் பதினாறு வருடங்கள் கடுமையாக உழைத்தார்கள். தனக்குக் கிடைக்கப் பெற்ற சுமார் ஆறு இலட்சம் ஹதீஸ்களையும் பகுத்தாய்ந்து அவற்றில் சுமார் 7275 ஹதீஸ்களை புஹாரியில் பதிந்துள்ளார்கள்.

அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் ஆதாரபூர்மாக நோக்கப்படுகின்ற இக்கிரந்தத்துக்குப் பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய பத்ஹுல் பாரி சிறப்பிடம் வகிக்கின்றது. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 256 இல் ஸமர்க்கந்தில் வபாத்தானார்கள்.

## 2. இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 204 - 261)



ஹிஜ்ரி 204 இல் நைஸாபூரில் உள்ள குஷைர் எனுமிடத்தில் பிறந்த இவரது இயற்பெயர் **அபுல் ஹஸன் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ் அல்குஷைரீ** என்பதாகும். ஆரம்பக் கல்வியை நைஸாபூரில் கற்றார். இயல்பிலேயே அபார நினைவாற்றலும் ஹதீஸ்களைத் திரட்டுவதில் ஆர்வமும் உடையவராக இருந்த இமாம் முஸ்லிம், ஹதீஸ்களைத் திரட்டும் நோக்கில் இமாம் புஹாரி போலவே பல தேசங்களுக்குப் பிரயாணம் செய்தார். இவர் திரட்டிய ஹதீஸ் தொகுப்பே ஸஹீஹ் முஸ்லிம் என அழைக்கப்படுகின்றது. இது ஸஹீஹுல் புஹாரிக்கு அடுத்த தரத்தில் மதிக்கப்படுகின்றது.

இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி தாம் திரட்டிய சுமார் மூன்று இலட்சம் ஹதீஸ்களில் இருந்து 7000 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிலிருந்து சுமார் 4000 ஹதீஸ்களைக் கொண்டு ஸஹீஹ் முஸ்லிமைத் தொகுத்துள்ளார்.

இக்கிரந்தத்துக்கு பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய அல் மின்ஹாஜ் எனும் நூல் மிகவும் பிரசித்தமானது. இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 261 இல் நைஸாபூரில் வபாத்தானார்கள்.


இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகிய இருவரது கிரந்தங்களும் ஹதீஸ் துறை அறிஞர்கள் மத்தியில் **''ஸஹீஹைன்''** எனவும் இவ்விரு கிரந்தங்களிலும் ஒரேவிதமாகப் பதியப்பட்டுள்ள ஹதீஸ்கள் **''முத்தபகுன் அலைஹி''** எனவும் அழைக்கப்படுகின்றன.

### பயிற்சி

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களதும் ஸஹாபாக்களதும் காலங்களில் ஹதீஸ்கள் தொகுக்கப்படாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை?
2. ஹதீஸ் துறைக்கு இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆற்றிய பங்களிப்பு யாது?
3. தபஉத் தாபிஈன்கள் காலத்தில் தோற்றம் பெற்ற ஹதீஸ் நூல்களுள் இரு வகையினைக் குறிப்பிடுக.
4. ஸஹீஹுல் புஹாரியின் விளக்கவுரை நூல் ஒன்றைக் குறிப்பிடுக.
5. ஸஹீஹ் முஸ்லிமின் விளக்கவுரையான அல்மின்ஹாஜின் ஆசிரியர் யார்?
6. ஹதீஸ்களைத் தொகுக்க, உத்தியோகபூர்வமாக உத்தரவு பிறப்பித்த கலீபா யார்?

# பகுதி – 2

முன்னைய பகுதியில் ஹதீஸ் துறை இமாம்களில் இருவரது வாழ்க்கை வரலாற்றையும் அவர்களது கிரந்தங்கள் பற்றியும் நோக்கினோம். இங்கு ஏனைய நான்கு இமாம்களது வரலாறுகளையும் அவர்கள் தொகுத்த கிரந்தங்கள் பற்றியும் நோக்குவோம்.



## இமாம் அபூதாவூத் ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 201 - 275)

**அபூதாவூத் ஸுலைமான் இப்னு அஷ்அஸ் அல் ஸஜஸ்தானி** என்பது இவரது முழுப் பெயராகும். ஹிஜ்ரி 202 இல் ஸிஜிஸ்தானில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை நைஸாபூரிலும் பின்னர் குராஸான், எகிப்து, ஸிரியா, ஹிஜாஸ் முதலான இடங்களிலும் கற்றார். இவர் ஹதீஸ்களை திரட்டுவதற்காகப் பல இடங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டார்.

இவர் சிறந்த நினைவாற்றல் கொண்டவராகவும், இறையச்சம், தியானம், ஈகை முதலிய நற்பண்புகளின் உறைவிடமாகவும் திகழ்ந்தார்.

இமாமவர்கள் தான் தேடிப் பெற்றுக்கொண்ட ஐந்து இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து சுமார் 20 வருட கால உழைப்பில் **ஸுனன் அபூதாவூத்** எனும் கிரந்தத்தைத் தொகுத்தார். இமாம் அபூதாவூத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 275இல் பஸராவில் வபாத்தானார்கள்.


## இமாம் திர்மிதி ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 209 - 279)



**இமாம் அபூ மூஸா முஹம்மத் இப்னு ஈஸா அத்திர்மிதி** ஹிஜ்ரி 209 இல் குராஸான் மாநிலத்தில் திர்மித் எனுமிடத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை குராஸானில் பெற்றுக் கொண்ட இவர், இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்று ஹதீஸ் துறைக்குப் பங்காற்ற வேண்டுமென உறுதி பூண்டார்.

இவ்விரு இமாம்களிடமும் கல்வி பயின்ற இவர் ஹதீஸ்களைத் திரட்டுவதற்காகப் பல பிரதேசங்களுக்கும் பயணங்களை மேற்கொண்டார். இவர் இறையச்சமும் நல்லொழுக்கமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார்.

இமாம் திர்மிதி தனக்குக் கிடைத்த பல இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4800 ஐத் தேர்ந்தெடுத்து ஹதீஸ் தொகுப்பு நூலொன்றை வெளியிட்டார். இது **ஜாமிஉத் திர்மிதி** என அழைக்கப்படுகிறது. ஹதீஸ்கள் திரும்பத் திரும்ப இடம்பெறாமையும் ஹதீஸ்களின் இறுதியில் அதன் தரம் குறிப்பிடப்பட்டிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும். இமாம் திர்மிதி ரஹ்மதுல்லாஹி அலைஹி ஹிஜ்ரி 279 இல் தன் பிறந்தகமான திர்மித் நகரிலேயே வபாத்தானார்கள்.




## இமாம் நஸாஈ ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 215 - 303)

ஹிஜ்ரி 215 இல் குராஸான் மாநிலத்திலுள்ள நஸாஃ எனும் ஊரில் பிறந்த இவரது முழுப் பெயர் **அபூ அப்துர் ரஹ்மான் அஹ்மத் இப்னு ஷுஐப் அந்நஸாஈ** என்பதாகும். முன்னைய ஹதீஸ் துறை அறிஞர்களைப் போலவே இமாம் நஸாஈயும் ஹதீஸ் துறையில் ஆர்வம் காட்டினார். அக்காலப் பிரிவில் ஹதீஸ் துறையில் பிரபலம் பெற்றிருந்த முஹத்திஸ்களைத் தேடிப் பல பிரதேசங்களுக்கு பயணம் மேற்கொண்டார்.

இப்பயணங்கள் மூலம் இவர் சேகரித்துக் கொண்ட ஐந்து இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4341 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஒரு ஹதீஸ் கிரந்தத்தை வெளியிட்டார். அதுவே **ஸுனன் நஸாஈ** என அழைக்கப்படுகின்றது. இக்கிரந்தம் தவிர இவர் வேறு பல நூல்களையும் எழுதியுள்ளார். எகிப்தை மையமாக வைத்துப் பாடபோதனை நடத்தி வந்த இமாம் நஸாஈ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், இமாம்களான தப்ரானீ, தஹாவீ போன்றோரது ஆசிரியரும் ஆவார். இவர் ஹிஜ்ரி 303 இல் மக்காவில் வபாத்தானார்.

## இமாம் இப்னு மாஜா ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 209 - 273)

ஹிஜ்ரி 209 இல் கஸ்வீன் நகரில் பிறந்த இமாம் இப்னு மாஜா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களது முழுப் பெயர் **அபூ அப்துல்லாஹ் முஹம்மதிப்னு யஸீத் அல் கஸ்வீனீ** என்பதாகும். ஹதீஸ் துறையின் புகழ்பூத்த காலப் பகுதியில் வாழ்ந்த இவருக்கு ஹதீஸ் துறையில் ஏனைய இமாம்களைப் போன்று தானும் தேர்ச்சி பெற வேண்டும் என ஆர்வம் பிறந்தது. இதன் காரணமாகத் தனது பிறந்தகத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பின்னர் குராஸான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து முதலான ஹதீஸ் துறையில் புகழ் பெற்று விளங்கிய நகர்களுக்குச் சென்று ஹதீஸ் கலையைப் பயின்றார்.



இமாம்களான அபூபக்ர் இப்னு அபீ ஷைபா ரஹ்மதுல்லாஹி அலைஹி, இப்றாஹீம் இப்னு முன்ஸிர் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்றோர் இமாம் இப்னு மாஜாவின் ஆசிரியர்களாவர்.

ஸுனன் இப்னுமாஜா ஸிஹாஹுஸ் ஸித்தாவில் ஒன்றாகும். இமாமவர்கள் தமக்குக் கிடைத்த சுமார் நாற்பதாயிரம் ஹதீஸ்களில் சுமார் 4000 ஹதீஸ்களைத் தெரிவு செய்து இந்நூலைத் தொகுத்துள்ளார்கள். இமாமவர்கள் ஹிஜ்ரி 273 இல் வபாத்தானார்கள்.

இந்நால்வரது கிரந்தங்களும் ஹதீஸ் துறை அறிஞர்கள் மத்தியில் **''ஸுனன் அர்பஆ''** என அழைக்கப்படுகின்றன.

| பெயர் | பிறப்பு ஹிஜ்ரி | புனைப் பெயர் | தந்தை பெயர் | பிறந்த ஊர் | ஹதீஸ் தொகுப்பு | உள்ள டக்கம் | மறைவு ஹிஜ்ரி |
|---|---|---|---|---|---|---|---|
| முஹம்மத் | 194 | புஹாரி | இஸ்மாஈல் | புஹாரா | ஸஹீஹ் புஹாரி | 7275 | 256 |
| முஸ்லிம் | 204 | | ஹஜ்ஜாஜ் | நைசாபூர் | ஸஹீஹ் முஸ்லிம் | 4000 | 261 |
| முஹம்மத் | 209 | திர்மிதி | ஈஸா | திர்மிதி | ஜாமிஉத் திர்மிதி | 4800 | 279 |
| ஸுலைமான் | 201 | அபூ தாவூத் | அஷ்அஸ் | சிஜிஸ்தான் | ஸுனன் அபூதாவூத் | 4800 | 275 |
| அஹ்மத் | 215 | நஸாஈ | சுஐப் | நஸாஃ | ஸுனன் நஸாஈ | 4341 | 303 |
| முஹம்மத் | 209 | இப்னு மாஜா | யஸீத் | கஸ்வின் | ஸுனன் இப்னு மாஜா | 4000 | 273 |

**பயிற்சி**

1. புனைப் பெயராலன்றி சொந்தப் பெயரால் அழைக்கப்படும் ஹதீஸ் துறை இமாம் யார்?
2. திர்மிதி கிரந்தத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
3. இமாம் நஸாஈ அவர்களின் மாணவர்கள் யாவர்?
4. இமாம் இப்னு மாஜாவின் ஆசிரியர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
5. ஸுனன் அர்பஆவில் அடங்கும் கிரந்தங்கள் யாவை?